**பட்டியல் வகுப்பினர் பழங்குடியினருக்கான (வன்கொடுமைதடுப்பு)**

**சிறப்பு நீதிமன்றம், திருவாரூர்.**

**முன்னிலை: திரு. M. வடிவேல், பி.காம்., பி.எல்.,**

அமர்வு நீதிபதி பட்டியல் வகுப்பினர் மற்றும்

பழங்குடியினருக்கான(வன்கொடுமை தடுப்பு)

சிறப்பு நீதிமன்றம், திருவாரூர்.

2026 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 29 ஆம் நாள் புதன்கிழமை

**சிறப்பு அமர்வு வழக்கு எண். 06/2025**

**[CNR.NO.TNTV16-000006 -2025]**

(தஞ்சாவூர் முதலாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம்

(**சிறப்பு அமர்வு வழக்கு எண்.** 94/2022

[CNR.NO.TNTJ09-001063 -2022])

| | |
|---|---|
| புகார்தாரரின் பெயர் | தமிழ்நாடு அரசுக்காக<br>காவல் துணை கண்காணிப்பாளர்,<br>நன்னிலம் உட்கோட்டம்,<br>குடவாசல் காவல் நிலையம்,<br>குற்ற எண். 497/2022. |
| குற்றம் சாட்டப்பட்டவர்களின் பெயர்கள் | **1. சசிக்குமார், (வயது 38/2026)**<br>த/பெ. மணி,<br>கன்னாரதெரு, 52, புதுக்குடி,<br>குடவாசல் தாலுக்கா,<br>திருவாரூர் மாவட்டம்.<br><br>**2. சரவணன், (வயது 43/2026)**<br>த/பெ. மணி, |

| | |
|---|---|
| | கன்னாரதெரு, 52, புதுக்குடி,<br>குடவாசல் தாலுக்கா,<br>திருவாரூர் மாவட்டம். |
| எதிரிகள் மீதான குற்றச்சாட்டுகள் விபரம் | **1-வது எதிரி மீது** இ.த.ச பிரிவு 294(b), ப.ச.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரிவுகள் 3(1)(r), 3(1)(s), இ.த.ச பிரிவு 324 உ/இ ப.ச.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரிவு 3(2)(va) மற்றும் இ.த.ச பிரிவு 506(ii).<br>**2-வது எதிரி மீது** ப.ச.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரிவுகள் 3(1)(r), 3(1)(s), இ.த.ச பிரிவு 323 உ/இ ப.ச.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரிவு 3(2)(va) மற்றும் இ.த.ச பிரிவு 506(ii). |
| எதிரிகள் காவலில் அடைக்கப்பட்ட நாள் | மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் பிறப்பித்துள்ள உத்தரவின்படி எதிரிகள் கடந்த 26.10.2022-ம் தேதியன்று தஞ்சாவூர் முதலாவது மாவட்ட கூடுதல் மற்றும் அமர்வு நீதிமன்றத்தில் சரணடைந்து பிணை மனு தாக்கல் செய்து பிணையில் சென்றுள்ளார்கள். |
| புகார் கொடுக்கப்பட்ட நாள் | 30.09.2022 |
| இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்ட நாள் | 16.11.2022 |
| கு.வி.மு.ச பிரிவு 228- ன் கீழ் எதிரிகளிடம் கேள்வி | 05.12.2023 |

| | | |
|---|---|---|
| கேட்கப்பட்ட நாள் | | |
| பா.நா.சு.ச. பிரிவு 348-ன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட பலவகை மனுக்கள் மற்றும் அதன் மீதான உத்தரவுகள். | -- | |
| **சாட்சிகளின் பெயர்கள்** | **மு.வி. நாள்** | **கு.வி . நாள்** |
| அ.சா.1 ஆனந்த் | 20.12.2024 | 20.12.2024 |
| அ.சா.2 தங்கமணி | 20.12.2024 | 20.12.2024 |
| அ.சா.3 முகேஷ் | 24.01.2025 | 24.01.2025 |
| அ.சா.4 சுபாஷ் சந்திரபோஸ் | 11.08.2025 | இல்லை |
| அ.சா.5 பாலமுருகன் | 11.08.2025 | இல்லை |
| அ.சா.6 புகழேந்தி | 11.08.2025 | இல்லை |
| அ.சா.7 சாமிநாதன் | 11.08.2025 | இல்லை |
| அ.சா.8 செல்வசண்முகம் | 11.08.2025 | இல்லை |
| அ.சா.9 பாஸ்கர் | 15.09.2025 | இல்லை |
| அ.சா.10 பாப்பையன் | 15.09.2025 | இல்லை |
| அ.சா.11 சிவராமன் - மருத்துவர் | 24.09.2025 | 24.09.2025 |
| அ.சா.12 சக்திபாலன் - மருத்துவர் | 13.10.2025 | 13.10.2025 |

| | | |
|---|---|---|
| அ.சா.13 குருநாதன் - வட்டாட்சியர் | 29.10.2025 | இல்லை |
| அ.சா.14 சரவணகுமார் - வட்டாட்சியர் | 13.11.2025 | இல்லை |
| அ.சா.15 நடராஜசேதுபதி - மருத்துவர் | 01.12.2025 | இல்லை |
| அ.சா.16 ராதாகிருஷ்ணன் - சிறப்பு உதவி ஆய்வாளர் | 09.02.2026 | 09.02.2026 |
| அ.சா.17 இலக்கியா - காவல் துணை கண்காணிப்பாளர் | 26.02.2026 | 26.02.2026 |
| பா.நா.சு.ச பிரிவு 351(1)(b)-ன் கீழ் எதிரிகளிடம் கேள்வி கேட்கப்பட்ட நாள் | 04.03.2026 | |
| எதிரிகள் தலைமறைவான நாள் மற்றும் ஆஜர்படுத்தப்பட்ட விபரம் | -- | |
| குற்றம் சாட்டப்பட்டவர்களின் கூற்றுக்கள் | குற்றவாளிகள் இல்லை. | |
| நீதிபதியின் தீர்மானம் | 1ம் எதிரி மீது இ.த.ச பிரிவு 324 உ/இ ப.சா & ப.ப (வ.கொ.த) சட்டப்பிரிவு 3(2)(va)-ன் கீழ் குற்றச்சாட்டு வனையப்பட்டிருந்த | |

| | |
|---|---|
| | போதிலும், இந்த 1ம் எதிரி இ.த.ச பிரிவு 323 உ/இ ப.சா & ப.ப (வ.கொ.த) சட்டப்பிரிவு 3(2)(va)-ன் கீழ் குற்றவாளி.<br>1ம் எதிரி மீதான மற்ற இ.த.ச பிரிவு 294(b), ப.சா.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரிவுகள் 3(1)(r), 3(1)(s), இ.த.ச பிரிவு 506(ii)-ன் கீழ் குற்றவாளி இல்லை.<br>2-வது எதிரி ப.சா.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரிவுகள் 3(1)(r), 3(1)(s), இ.த.ச பிரிவு 323 உ/இ ப.சா.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரிவு 3(2)(va) மற்றும் இ.த.ச பிரிவு 506(ii)-ன் கீழ் குற்றவாளி இல்லை. |
| நீதிபதியின் தீர்ப்பு | **முடிவாக**,<br>1ம் எதிரி மீது இ.த.ச பிரிவு 324 உ/இ ப.சா & ப.ப (வ.கொ.த) சட்டப்பிரிவு. 3(2)(va)-ன் கீழ் குற்றச்சாட்டு வனையப்பட்டிருந்த போதிலும், இந்த 1ம் எதிரி இ.த.ச பிரிவு 323 உ/இ ப.சா & ப.ப (வ.கொ.த) சட்டப்பிரிவு. 3(2)(va)-ன் கீழான குற்றம் நிரூபணம் செய்யப்பட்டுள்ளது என்பதால் குற்றவாளி என தீர்மானித்து மேற்படி குற்றத்திற்கு 1ம் எதிரிக்கும் ஆறு மாதங்கள் மெய்காவல் சிறை தண்டனையும் மற்றும் அபராதம் ரூ.1000/- விதித்தும், மேற்படி அபராத தொகை செலுத்த தவறும் பட்சத்தில் மேலும் ஒரு |

| | |
|---|---|
| | மாத மெய்காவல் சிறை தண்டனை விதித்தும், 1ம் எதிரி மீதான மற்ற இ.த.ச பிரிவு 294(b), ப.சா.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரிவுகள் 3(1)(r), 3(1)(s), இ.த.ச பிரிவு 506(ii)-ன் கீழ் குற்றவாளி இல்லை என தீர்மானித்தும்.<br>2ம் எதிரி ப.சா.&ப.ப (வ.கொ.த.) சட்டப்பிரிவுகள் 3(1)(r), 3(1)(s), இ.த.ச பிரிவு 323 உ/இ ப.சா.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரிவு 3(2)(va) மற்றும் இ.த.ச பிரிவு 506(ii). கீழ், குற்றவாளி இல்லை என விடுதலை செய்தும், பா.நா.சு.ச பிரிவு 258(1)-ன் படி விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது. |

இவ்வழக்கு 27.04.2026 அன்று என் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்த போது அரசுக்காக சிறப்பு அரசு குற்றத்துறை வழக்கறிஞர் திரு.S.மகாதேவன் அவர்களும், எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.P.சண்முகநாதன் அவர்களும், முன்னிலையாகியும் செய்த இரு தரப்பு வாதங்களை கேட்டும், இவ்வழக்கில் அரசு தரப்பில் விசாரணை செய்யப்பட்டுள்ள சாட்சிகள் சான்றாவணங்கள் அனைத்தும் பரிசீலனை செய்யப்பட்டதன் அடிப்படையில் இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு வழங்கும்.....

**தீர்ப்புரை**

**1. அரசுத்தரப்பு வழக்கின் சுருக்கம் :-**

இவ்வழக்கின் அ.சா.1 ஆனந்த் மற்றும் அவரது நண்பர் அ.சா.2 தங்கமணி ஆகியோர்கள் இந்து பறையன் சமூகத்தை சேர்ந்தவர்கள் ஆவார்கள். எதிரிகள் இந்து அகமுடையார் வகுப்பை சேர்ந்தவர்கள் ஆவார்கள். அ.சா.1 ஆட்டோ ஓட்டுனர் ஆவார். சுமார் 4 மாதங்களுக்கு முன்பு இரவு 10 மணியளவில் அ.சா.1 புதுக்குடி பேருந்து நிறுத்தத்தில் ஆட்டோவை நிறுத்தியிருக்கும்போது 1-வது எதிரியானவர் குடித்துவிட்டு வந்து அ.சா.1-ஐ பார்த்து எதுக்குட ஆட்டோவ போட்டு நிக்குற என்று திட்டி சத்தம்போட்டுள்ளார். இது சம்பந்தமாக ஊர் முக்கியஸ்தர்கள் முன்னிலையில் பஞ்சாயத்து பேசி 1-ம் எதிரி, அ.சா.1-டம் மன்னிப்பு கேட்டுள்ளார். 1-ம் எதிரி சசிக்குமார் அகமுடையார் சமுதாயத்தை சார்ந்தவர். அ.சா.1 தாழ்த்தப்பட்ட வகுப்பை சார்ந்தவனிடம் மன்னிப்பு கேட்டுவிட்டோமே என்ற விரோதத்தை மனதில் வைத்துக்கொண்டு கடந்த 29.09.2022-ம் தேதி இரவு 07.00 மணியளவில் அ.சா.1 புதுக்குடி கடைவீதி சுபாஷ் சலூன் கடை எதிரில் நடந்து போய் கொண்டிருந்தபோது 1-வது எதிரி அ.சா.1-ஐ பார்த்து டேய் இங்கு வாடா குச்சிகாரி, தேவடியா மகனே எங்கடா போர பறப்பயலுக்கு இங்கு என்னடா வேல பறதேவடியா மகனே

எப்ப பார்த்தாலும் வம்புவளக்குற, முறைக்குற என்று காமகுரோதமாக சாதியை இழிவுபடுத்தும் விதமாக பேசியபோது அ.சா.1 ஏன் தேவையில்லாம பேசுறீங்க நமக்குள் பஞ்சாயத்து பேசி முடித்துவிட்டார்களே என்று சொன்னதற்கு 1-ம் எதிரி என்னடா பறப்பயலுக்கு அவ்வளவு கோவம் வருதா என்று சொல்லி சலூன் கடைக்கு பக்கத்தில் உள்ள டூவிலர் ஒர்க்ஸ் ஷாப் -ல் கிடந்த இரும்பு ராடை எடுத்து அ.சா.1-ன் தலையில் அடித்து சொற்பகாயத்தை ஏற்படுத்தியும், 2-ம் எதிரி 1-ம் எதிரியிடம் அவனை விடாதடா அந்த பறகுச்சிகாரி மகன அடித்து கொல்லுடா என்று சொல்லி கொண்டு கீழே கிடந்த கல்லை எடுத்து அடிக்க வரும்போது அ.சா.2 தடுக்கவே 2-ம் எதிரி அந்த பறகுச்சிகாரி மகனுக்கு நீ என்ன சப்போட்டா பற குச்சிகாரி மவனே தேவிடியா மகனே என்று காமகுரோதமாக சாதியை இழிவுபடுத்தி திட்டியும் கையில் வைத்திருந்த கல்லால் தலையில் ஓங்கி அடித்து சொற்ப காயத்தை ஏற்படுத்தியும் இருவரும் போகும் போது ஆயுதங்களை காண்பித்து உங்களை கொல்லாமல் விடமாட்டோம் என கொலை மிரட்டல் விடுத்ததாகவும் இதனால், 1, 2 எதிரியானவர்கள் இ.த.ச பிரிவுகள் 294(b), 324, 506(ii) உ/இ. ப.சா.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரிவு 3(1)(r), 3(1)(s), 3(2)(va) -ன் கீழ் தண்டிக்கப்பட வேண்டுமென குடவாசல் காவல் நிலைய உட்கோட்ட காவல் துணை கண்காணிப்பாளர் அவர்கள் இறுதி

அறிக்கையினை தஞ்சாவூர், முதலாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார்.

2. மேற்படி இறுதி அறிக்கையானது தஞ்சாவூர், முதலாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் சிறப்பு அமர்வு வழக்கு எண். 94/2022 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டுள்ளது.

3. இவ்வழக்கின் 1, 2 எதிரிகள் தஞ்சை நீதிமன்றத்தில் முன்னிலையானவுடன் வழக்கின் ஆவணங்கள் இலவசமாக வழங்கப்பட்டு பின்னர் இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டு 1-வது எதிரி மீது இ.த.ச பிரிவு 294(b), ப.சா.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரிவு 3(1)(r), 3(1)(s), இ.த.ச பிரிவு 324 உ/இ ப.சா.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரிவு 3(2)(va) மற்றும் இ.த.ச பிரிவு 506(ii) – ன் கீழும், 2-வது எதிரி மீது ப.சா.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரிவு 3(1)(r), 3(1)(s), இ.த.ச பிரிவு 323 உ/இ ப.சா.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரிவு 3(2)(va) மற்றும் இ.த.ச பிரிவு 506(ii) -ன் கீழும் குற்றச்சாட்டுகள் வனைந்து, தமிழில் படித்துக்காட்டி விளக்கி கூறி வினவியபோது 1, 2 எதிரிகள் குற்றசாட்டுகளை மறுத்துள்ளனர். அதனால் அரசுத்தரப்பில் சாட்சிகளை விசாரணை செய்ய மேற்படி தஞ்சை நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. இதனை தொடர்ந்து அரசுத்தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு அ.சா.ஆ.1 குறியீடு செய்யப்பட்டு மீதமுள்ள

சாட்சிகள் விசாரணை செய்யப்பட வேண்டும் என்ற நிலையில் வழக்கு தஞ்சை நீதிமன்றத்தில் நிலுவையில் இருந்தபோது, திருவாரூர் மாவட்டத்தில் பட்டியல் சாதியினர் மற்றும் பட்டியல் பழங்குடியினர் (வன்கொடுமைகள் தடுப்பு) சட்டத்தின் கீழான வழக்குகளை விசாரிப்பதற்கான இந்த புதிய நீதிமன்றம் கடந்த 19.07.2025 ம் தேதியன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. அதன் பின்னர் இவ்வழக்கு நிகழ்வானது இந்நீதிமன்ற அதிகார வரம்பிற்குள் நடைபெற்றுள்ளது என்பதால் மேற்படி இவ்வழக்கு தஞ்சை நீதிமன்றத்தில் இருந்து இந்நீதிமன்றத்திற்கு மாற்றம் செய்யப்பட்டு, இந்நீதிமன்றத்திற்கு இவ்வழக்கு கோப்பு வந்தவுடன் புதிதாக வழக்கு எண் S.S.C. No. 06/2025 கொடுக்கப்பட்டு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. பின்னர் எதிரிகள் இந்நீதிமன்றத்தில் ஆஜரானவுடன், இவ்வழக்கில் எஞ்சியுள்ள சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டு சான்றாவணம் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

4. இவ்வழக்கில் அரசு தரப்பில் மொத்தம் அ.சா-1 முதல் அ.சா-17 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.15 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

5. <u>அரசுத்தரப்பு சாட்சிய சான்றாவணங்களில் இருந்து தெரியவரும் அரசுத்தரப்பு வழக்கின் சுருக்கம் பின்வருமாறு</u> :-

**(i)** **<u>அ.சா-1 ஆனந்த்</u>** இவர் இவ்வழக்கின் நிகழ்நிலை புகார்தாரர் ஆவார். இவரது சாட்சியத்தின் படி இவர் இந்து பறையன் வகுப்பை சேர்ந்தவர் ஆவார். இவர் ஆட்டோ ஓட்டுனராக தொழில் செய்து வருகிறார். இவருக்கு இந்த எதிரிகளை தெரியும். இந்த வழக்கு சம்பவ தேதியான **<u>29.09.2022</u>**-ம் தேதியிலிருந்து நான்கு மாதங்களுக்கு முன்பாக இந்த அ.சா.1 தான் ஓட்டிவரும் ஆட்டோவை ஒரு இடத்தில் நிறுத்தும்போது 1-ம் எதிரி, இந்த அ.சா.1-யை பார்த்து பறையன் என்ற காரணத்தினால் இங்கு ஆட்டோ நிறுத்தக்கூடாது என கூறியுள்ளார். இதனை தொடர்ந்து ஊரில் பஞ்சாயத்து நடைபெற்றுள்ளது. ஊர் பஞ்சாயத்தில் இந்த அ.சா.1-யிடம் ஆட்டோவை நிறுத்தக்கூடாது என்று சொல்லியுள்ளனர். இதனால் ஏற்பட்ட மேற்படி விரோதத்தை மனதில் வைத்துக்கொண்டு 1-ம் எதிரி இந்த அ.சா.1 ஐ எங்கு பார்த்தாலும் முறைத்து வந்துள்ளார். கடந்த 29.09.2022 ம் தேதி மாலை 07.00 மணியளவில் அ.சா.1 முடிவெட்டும் கடைக்கு சென்றுள்ளார். அப்போது 1-ம் எதிரி சசிக்குமார் அங்கு இருந்துள்ளார். அவரிடம் இந்த அ.சா.1 ஏன் எங்கு பார்த்தாலும் முறைக்கிறீர்கள் என்று கேட்டுள்ளார். அப்போது 1-ம் எதிரி, அ.சா.1-ன் தலையில் இரும்பு ராடால் இரண்டுமுறை அடித்துள்ளார். இதில் அ.சா.1 மயக்கமடைந்துள்ளார். பின்னர், அவரை அங்கு உள்ளவர்கள் திருவாரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சைக்காக

சேர்த்துள்ளனர். இவர் மருத்துவமனையில் சிகிச்சையில் இருக்கும்போது விசாரணை செய்ய வந்த போலிசாரிடம் அ.சா.ஆ.1 ஆன புகார் வாக்குமூலம் அளித்துள்ளார்.

(ii) **அ.சா.2 தங்கமணி** இவரது சாட்சியத்தில், சம்பவ தேதியன்று மாலை 07.00 மணியளவில் சம்பவம் இடம் அருகே போய்கொண்டிருந்த போது அங்கிருந்த **ஒரு ஓர்க் ஷாப்பில் அ.சா.1 ஆனந்த் என்பவரை 1-ம் எதிரி சசிக்குமார் அடித்துள்ளதை பார்த்து, ஏன் அடிக்கிறீர்கள் என** இந்த அ.சா.2 கேட்டுள்ளார். அப்போது இந்த **2-ம் எதிரி சரவணன்** கல்லால் இந்த அ.சா.2 யின் தலையில் அடித்துள்ளார்.

(iii) **அ.சா.3 முகேஷ்** இவரது சாட்சியத்தில், சம்பவ தேதியன்று மாலை 07.00 மணியளவில் புதுக்குடி கடைத்தெருவில் உள்ள சலூன் கடை அருகே அ.சா.1 ஆனந்த் என்பவரை டயர் கழற்றக்கூடிய இரும்பு ராடால் 1-ம் எதிரி சசிக்குமார் அடித்து, 2-ம் எதிரி சரவணன் அ.சா.2 தங்கமணி என்பவரை கல்லால் அடித்து, இங்கு நாங்க தான் எல்லாம் பற தேவுடியா பசங்களா ஓடுங்கடா என்று எதிரிகள் கூறியதை இவர் பார்த்துள்ளார்.

(iv) **அ.சா.4 சுபாஷ்சந்திரபோஸ்** இவர் முடிதிருத்தும் கடை வைத்துள்ளார். கடந்த 29.09.2022 ஆன சம்பவ தேதியன்று இரவு 07.00 மணிக்கு இவரது கடைக்கு வெளியே சுமார் 10 நபர்கள்

நின்றுகொண்டிருந்துள்ளனர். அதில், அ.சா.1 ஆனந்த் மற்றும் அ.சா.3 முகேஷ் ஆகியோர்கள் 1-ம் எதிரி சசிக்குமாரை அடித்துள்ளனர். மேற்படி சத்தம்கேட்டு இவர் வந்தபோது வலி தாங்கமுடியாமல் எதிரிகள் இருவரும் அ.சா.1 ஆனந்த் மற்றும் அ.சா.3 முகேஷ் அடித்ததை பார்த்தாக கூறியுள்ளார்.

(v) **அ.சா.11** **மருத்துவர், சிவராமன்** இவர் திருவாரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் கடந்த 29.09.2022-ம் தேதி இரவு 08.52 மணியளவில் இவர் பணியில் இருந்த போது அ.சா.3 முகேஷ் என்பவர் அ.சா.1 யை சிகிச்சைக்காக அழைத்து வந்துள்ளார். அப்போது இந்த அ.சா.11 ஆனவர் அ.சா.1 யை பரிசோதனை செய்ததில் அ.சா.1-க்கு தலையில் 3 x2 x 1 செ.மீ கிழிந்த காயம் ஒன்று இருந்ததை பார்த்து அதனை தொடர்ந்து அ.சா.ஆ.4 ஆன விபத்து பதிவேட்டினை பதிவு செய்து உள்நோயாளியாக அனுமதித்துள்ளார். மேலும், மேற்படி தேதி மற்றும் நேரத்தில் சுகுமார் என்பவர் அழைத்து வந்திருந்த அ.சா.2 தங்கமணி என்பவரை உள்நோயாளியாக அனுமதித்து அ.சா.ஆ.5 ஆன விபத்து பதிவேட்டினை பதிவு செய்துள்ளார்.

(vi) **அ.சா.12 மருத்துவர், சக்திபாலன்** இவர் திருவாரூர் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டிருந்த அ.சா.1 க்கு சிகிச்சை அளித்துள்ளார். அ.சா.1-க்கு வலது தலையில் 6 x 2 x 1/2

செ.மீ கிழிந்த காயமும், வலது நெற்றியில் 5 x 2 x 1/2 செ.மீ கிழிந்த காயம் இருப்பதையும் பார்வையிட்டு மற்றும் வலது கையில் வலி இருப்பதாக கூறியதையும் அடுத்து அவருக்கு சிகிச்சையளித்து மேற்படி அவருக்கு இருந்த காயங்கள் சாதாரண காயங்கள் என அ.சா.ஆ.6 ஆன காயச்சான்று வழங்கியுள்ளார்.

**(vii) அ.சா.15 மருத்துவர், நடராஜ சேதுபதி** இவர் திருவாரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டிருந்த அ.சா.2 தங்கமணி என்பவருக்கு சிகிச்சை அளித்துள்ளார். இவர், அ.சா2 ன் தலையில் 6x2x0.5 செ.மீ வெட்டுக்காயமும், வலது ஆள்காட்டி விரலில் நகம் சிதைந்து காணப்பட்டது என்பதால் இதன் பொருட்டு மேற்படி அ.சா.2 க்கு சி.டி.ஸ்கேன் எடுக்க பரிந்துரை செய்யப்பட்டிருந்த நிலையில் தொடர் சிகிச்சை செய்துக்கொள்ளாமல் இந்த அ.சா.2 மருத்துவமனையில் இருந்து சென்றுவிட்டார் என தெரியவந்துள்ளது. இதன் காரணமாக அ.சா.2 க்கு இருந்த காயங்களின் தன்மை குறித்து தன்னால் கூற இயலாது என அ.சா.ஆ.11 ஆன கருத்துரையினை வழங்கியுள்ளார்.

**(viii) அ.சா.13 குருநாதன், வட்டாட்சியர்** இவர் குடவாசல் வட்டாட்சியராக பணிபுரிந்தபோது **நன்னிலம் உட்கோட்ட காவல்**

**கண்காணிப்பாளர்** அவர்களின் வேண்டுகோள் கடிதத்தின் பேரில் விசாரணை மேற்கொண்டு அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகிய இருவரும் இந்து பறையன் சமூகத்தை சேர்ந்தவர் என அ.சா.ஆ.7 மற்றும் அ.சா.ஆ.8 ஆன சாதி சான்றிதழ்களை கடந்த 11.10.2022-ம் தேதி வழங்கியுள்ளார். **அ.சா.14 சரவணகுமார்**, குடவாசல் வட்டாட்சியர் அலுவலகத்தில் மண்டல துணை வட்டாட்சியராக பணியில் இருந்தபோது நன்னிலம் உட்கோட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்கள் கொடுத்த வேண்டுகோள் கடிதத்தின் அடிப்படையில் 1 மற்றும் 2 எதிரிகள் இருவரும் இந்து அகமுடையார் சமூகத்தை சேர்ந்தவர்கள் என அ.சா.ஆ.9 மற்றும் அ.சா.ஆ.10 ஆன சாதி சான்றிதழ்களை வழங்கியுள்ளார்.

**(ix) அ.சா.16 ராதாகிருஷ்ணன்**, இவர் குடவாசல் காவல் நிலையத்தில் கடந்த 30.09.2022-ம் தேதி சிறப்பு உதவி ஆய்வாளராக பணியில் இருந்தபோது திருவாரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் இருந்த கிடைத்த தகவலின் அடிப்படையில் மேற்படி மருத்துவமனைக்கு சென்று அங்கு சிகிச்சையில் இருந்த அ.சா.1 ஆனந்த் என்பவரை விசாரணை செய்து அ.சா.ஆ.1 ஆன புகார் வாக்குமூலத்தை பெற்று நிலையம் வந்து நிலைய குற்ற எண்.497/2022 இ.த.ச பிரிவுகள் 294(b), 324,

506(ii) உ/இ ப.சா &ப.ப (வ.கொ.த) சட்டப்பிரிவு 3(1)(r), 3(1)(s), 3(2)(va) -ன் கீழ் அ.சா.ஆ.12 ஆன முதல் தகவல் அறிக்கையினை பதிவு செய்துள்ளார்.

**(x) <u>அ.சா.17 இலக்கியா</u>** இவர் நன்னிலம் உட்கோட்ட காவல் துணை கண்காணிப்பாளராக பணிபுரிந்த போது கடந்த 30.09.2022-ம் தேதி குடவாசல் காவல் நிலையத்தில் அ.சா.ஆ.12 ஆக பதிவு செய்யப்பட்டுள்ள முதல் தகவல் அறிக்கையின் பேரிலான இவ்வழக்கை இந்த அ.சா.16 புலன் விசாரணை மேற்கொள்ள வேண்டுமென திருவாரூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்கள் பிறப்பித்துள்ள அ.சா.ஆ.13 ஆன செயல்முறை ஆணையின் பேரில் இவ்வழக்கை புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சம்பவ இடம் சென்று சாட்சிகள் அ.சா.9 மற்றும் அ.சா.10 ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு அ.சா.ஆ.14 பார்வை மகஜர் மற்றும் அ.சா.ஆ.15 ஆன மாதிரி வரைபடம் ஆகியவற்றை தயார் செய்துள்ளார். பின்னர் இவ்வழக்கில் உள்ள சம்பவ சாட்சிகள் மற்றும் கண்ணுற்ற சாட்சிகளை விசாரணை செய்து வாக்குமூலங்கள் பதிவு செய்துள்ளார். காயம்பட்ட அ.சா.1 மற்றும் அ.சா.2-க்கு சிகிச்சையளித்த மருத்துவர்களை விசாரணை செய்து விபத்துபதிவேடு மற்றும் காயச்சான்றிதழ்களை பெற்றுள்ளார். எதிரிகளுக்கு சாதி சான்றிதழ்கள் வழங்கிய அ.சா.14 சரவணன் என்பவரையும், அ.சா.1 மற்றும் அ.சா.2

ஆகியோர்களுக்கு சாதி சான்றிதழ்கள் வழங்கிய அ.சா.13 குருநாதன் என்ற வட்டாட்சியரை விசாரணை செய்து வாக்குமூலங்கள் பதிவு செய்துள்ளார். இவ்வழக்கின் எதிரிகள் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற உத்தரவின் படி தஞ்சை முதலாவது மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் சரணடைந்து பிணை மனு தாக்கல் செய்து பிணையில் சென்றுள்ளனர் என்பதை தெரிந்துக்கொண்டு இவ்வழக்கின் புலன் விசாரணை முடித்து இந்த எதிரிகள் மீது இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**(xi)** **அ.சா.5 பாலமுருகன்**, **அ.சா.7 சாமிநாதன்**, **அ.சா.8 செல்வசண்முகம்**, ஆகியோர்கள் சம்பவம் பற்றி எதுவும் தெரியாது என சாட்சியமளித்துள்ளனர். **அ.சா.6 புகழேந்தி** சம்பவ தேதியன்று அ.சா.1-ன் தலையில் ரத்த காயத்துடன் இருந்துள்ளதை பார்த்ததாக சாட்சியமளித்துள்ளார். **அ.சா.9 பாஸ்கர்**, **அ.சா.10 பாப்பையன்**, ஆகியோர்கள் அ.சா.ஆ.14 ஆன பார்வை மகஜரில் உள்ள அ.சா.9 மற்றும் அ.சா.10 ஆகியோர்களின் கையொப்பங்கள் மட்டும் தங்களது என கூறியதால் அது அ.சா.ஆ.2 மற்றும் அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

7. இவ்வழக்கில் அரசுத்தரப்பு சாட்சியங்கள் விசாரணை முடிந்தவுடன் அரசுத்தரப்பு சாட்சியங்களில் எதிரிகளுக்கு எதிராக உள்ள சாட்சியங்களை குறித்து பா.நா.சு.ச பிரிவு351(1)(b)-ன் கீழ் கேள்வி கேட்டபோது எதிரிகள்

அரசுத்தரப்பு சாட்சியங்களை பொய் என்று கூறியுள்ளார்கள். மேலும், தங்களது தரப்பில் சாட்சியங்கள் எதுவும் இல்லை என்று கூறியுள்ளார்கள்.

**8.** இவ்வழக்கில் தீர்வுக்குரிய பிரச்சனை யாதெனில்,

(i) 1-வது எதிரி மீது இ.த.ச பிரிவு 294(b), ப.சா.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரிவு 3(1)(r), 3(1)(s), இ.த.ச பிரிவு 324 உ/இ ப.சா.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரிவு 3(2)(va) மற்றும் இ.த.ச பிரிவு 506(ii) -ன் கீழும்,

(ii) 2-வது எதிரி மீது ப.சா.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரிவு 3(1)(r) 3(1)(s), இ.த.ச பிரிவு 323 உ/இ ப.சா.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரிவு 3(2)(va) மற்றும் இ.த.ச பிரிவு 506(ii)-ன் கீழான குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதாகும்.

**9. அரசு தரப்பு வாதம்.** அரசு தரப்பில் ஆஜரான கற்றந்த வழக்கறிஞர், இவ்வழக்கின் எதிரிகள் இருவரும் பிற்படுத்தப்பட்ட சாதியினை சேர்நதவர்கள் என்பதும், அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகியோர்கள் பட்டியில் சமூகத்தினர்கள் என்ற விபரம் அரசு தரப்பில் சான்றுகள் மூலம் நிரூபணம் செய்யப்பட்டுள்ளது. மேலும் இந்த பொருண்மைகள் எதிரிகள் தரப்பில் மறுக்கப்படவில்லை.இவ்வழக்கின் எதிரிகள் இருவரும் அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகியோர்களை சாதியின் பெயரை சொல்லி இழிவாக பேசி தாக்கியுள்ளனர் என அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகியோர்கள் தங்களது

சாட்சியத்தில் தெளிவாக கூறியுள்ளனர். மேற்படி அ.சா.1 க்கு காயம் இருந்துள்ளது என்பது மருத்துவர் சாட்சியம் மற்றும் காயச்சான்றுகள் மூலம் நிரூபணம் ஆகியயுள்ளது. இதனால் இந்த எதிரிகள் இருவரும் சட்டப்படி தண்டிக்கப்படவேண்டும் என வாதம் செய்துள்ளார்.

10. எதிரிகள் தரப்பு வாதம்.

இவ்வழக்கின் எதிரிகள் எந்த வித குற்றமும் செய்யவில்லை. இவ்வழக்கின் சம்பவம் குறித்து பல புகார்கள் கொடுத்தாக அ.சா-1 குறுக்கு விசாரணையில் கூறியுள்ளார். அதன் படி பார்க்கும் போது முதல் புகார் மறைக்கப்பட்டுள்ளது. வழக்கின் சம்பவம் நடந்தாக கூறக்கூடிய இடம் எது என்பதை பொறுத்தவரையில் சாட்சிகளுக்குள் முரண்பாடு காணப்படுகிறது. காயம் பட்ட தாக சொல்லப்படும் அ.சா.2 ஆனவர் மருத்துவ சிகிச்சைக்காக சேரும் போது மருத்துவரின் தன்னை அடையாளர் தெரியாத நபர் தாக்கியதாக கூறியுள்ளார். எதிரிகள் அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகியோர்களை தாக்க பயன்படுத்தியதாக சொல்லப்படும் பொருட்கள் அதாவது கம்பி மற்றும் கல் ஆகியவைகள் காவல் துறையினர் கைப்பற்றவில்லை. உண்மையில் நடைபெறாத சம்பவம் என்பதால் இவ்வழக்கில் மேற்படி முரண்பாடுகள் காணப்படுகிறது. இதனால் எவ்வித

குற்றமும் செய்யாத எதிரிகளை விடுதலை செய்திடவேண்டும் என கேட்டுக்கொண்டுள்ளார்.

**11.** இரு தரப்பு வாதங்களும் நன்கு கேட்கப்பட்டு, சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் அனைத்தும் நன்கு பரிசீலனை செய்யப்பட்டது.

**12. தீர்வு:-**

அரசுத்தரப்பு வழக்கின்படி பாதிக்கப்பட்ட நபர் அ.சா.1 ஆனந்த் மற்றும் அ.சா.2 தங்கமணி ஆவார்கள். இவர்கள் இருவரையும் எதிரிகள் தாக்கினார் என்பது தான் அடிப்படையான வழக்கு. இதனால் பாதிக்கப்பட்ட இந்த இந்த அ.சா.1 மற்றும் அ.சா.2 ன் சாட்சியங்கள் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். இதன் காரணமாக இந்த அ.சா.1 மற்றும் அ.சா.2 ன் சாட்சியங்களை முதற்கட்டமாக கவனமாக பரிசிலனை இந்நீதிமன்றம் எடுத்துக்கொண்டுள்ளது. அதைப்போலவே இவ்வழக்கில் சாட்சியங்களில் அ.சா.3 ஆனவர் சம்பவத்தை பார்த்தாக சாட்சியம் அளித்துள்ளார். எனவே அவரது சாட்சியமும் பார்வைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

**13.** இந்த அ.சா.1 ஆனந்த முதல் விசாரணை சாட்சியத்தில்

| |
|---|
| "நான் ஆட்டோ ஓட்டுநராக வேலை செய்து வருகிறேன். நான் இந்து பறையன் வகுப்பை சேர்ந்வன். ஆஜர் எதிரிகளை எதிரியும், கடந்த 29.09.2022ம் தேதி இரவு 7 மணியளவில் நான் முடிவெட்டும் கடைக்கு வந்திருந்தேன். அப்போது அங்கு (1ம் |

எதிரி) சசிக்குமார் உட்கார்ந்திருந்தார். அவர் என்னை எங்கு பார்த்தாலும், முறைபாக இருந்தார். ஏற்கனவே எனக்கும், அவருக்கும் 4 மாதத்திற்கு முன்பு தாகராறு இருந்தது. அப்போது இங்கு ஆட்டோ போடாக்கூடாது. பறையன் நீ ஏன்டா இங்கு ஆட்டோ போடுற என்று சொல்லி பேசினார் இது சம்மந்தமாக ஊரில் பஞ்சாயத்து வைத்து அங்கு போக கூடாது என்று சொல்லிவிட்டார்கள். அவர் என்னை எங்கு பார்த்தாலும் முறைப்பாதாக இருந்தார். நான் அவரை போய் ஏன் என்னை இதுபோல் செய்கிறீர்கள் என்று கேட்டேன். அதற்கு என் மண்டையில் ராடால் இரண்டு இடத்தில் அடித்துவிட்டார். நான் மயக்கம் போட்டுவிட்டேன் உடனே என்னை திருவாரூர் அரசு மருத்துவ மனையில் சிகிச்சைக்காக சேர்த்தார்கள். நான் சிகிச்சையில் இருக்கும் போது போலீசார் என்னை விசாரித்து புகார் வாக்குமூலம் பெற்றுக்கொண்டார்கள். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலம் நான் கொடுத்தது தான்.''

அடுத்தாக பாதிக்கப்பட்ட நபரான அ.சா.2 தங்கமணி.

''கடந்த 29.09.2022 ல் இரவு 7 மணிக்கு நான் வேலைக்கு போய்விட்டு சம்பவம் சில்லரை மாற்றுவதற்காக புதுக்குடிக்கு போய் கொண்டிருந்தேன். ஓர்க் ஷாப்பில் (அ.சா.1) ஆனந்திடம், (1ம் எதிரி) சசிக்குமாரும், அவரது அண்ணனும் தகாராறு செய்து கொண்டிருந்தார்கள். நான் அங்கு போய் பார்த்தபோது (அ.சா.1) ஆனந்தை (1ம் எதிரி) சகிக்குமார் அடித்துவிட்டார். நான் ஏன் அடிக்கிறீர்கள் என்று கேட்டபோது என் ஜாதி பெயரை சொல்லி கெட்ட வார்த்தையால் திட்டி கல்லால் (2 ம் எதிரி) சரவணன் என் தலையில் அடித்தார்''....

இவ்வழக்கு சம்பவத்தை கண்ணுற்ற சாட்சியாக சாட்சியம் அளித்துள்ள அ.சா.3 முகேஷ் என்பவரின் சாட்சியம் பார்வைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. அ.சா.3 முதல்விசாரணை சாட்சியத்தில்.

> "கடந்த 29.09.2022 ல் இரவு 7 மணியளவில் புதுக்குடி கடைத்தெருவில் உள்ள சலூான் கடை அருகில் (அ.சா.1) ஆனந்த் என்பவரை டயர் கழட்டக்கூடிய இரும்பு ராடால் (1ம் எதிர்) சசிக்குமார் என்பவர் அடித்தார். அதில் (அ.சா.1) ஆனந்த் என்பவருக்கு நெற்றி பகுதியில் காயம் ஏற்பட்டது. (அ.சா.2) தங்கமணியை கல்லால் (2ம் எதிரி) சரவணன் ஓடுடா என்று அடித்தார். இங்கு நாங்க தான், பறதேவுயா பசங்க ஓடுங்கடா என்று (2ம் எதிரி) சரவணனும், (1ம் எதிரி) சசியும் சொன்னார்கள். காயம்பட்டவர்களை சுகுமார், ஆம்புலன்ஸில் ஏற்றி திருவாரூர் அரசு மருத்துவ மணைக்கு அழைத்து சென்றார்."

**14.** இந்த அ.சா.1 முதல் 3 வரையான சாட்சியங்களை நன்கு பரிசீலனை செய்ததில், முதற்கட்டமாக பாதிக்கப்பட்ட அ.சா.1 தனது சாட்சித்தில் இந்த எதிரிகள் தன்னை தனது சாதியின் பெயரை சொல்லி திட்டியதாகவோ அல்லது அசிங்கமாக பேசியதாகவோ எதுவும் கூறவில்லை. இந்த அ.சா.2 தனது சாட்சியத்தில் இந்த எதிரிகள் தனது ஜாதி பெயரை சொல்லி திட்டியதாக கூறியுள்ளாரே தவிர இவரது ஜாதியின் பெயரை உச்சரித்து திட்டியதாக எதுவும் கூறவில்லை. இந்நிலையில் இந்த அ.சா.3 மட்டும் எதிரிகள் இருவரும். அ.சா.1யை பார்த்து பற தேடிவுயா

பசங்களே ஓடுங்கடா என கூறியதாக கூறியுள்ளார். உன்மையில் சம்பவ இடத்தில் எதிரிகளால், பாதிக்கப்பட்டதாக சொல்லப்படும் அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகியோர்களை ஜாதியின் பெயரை எதிரிகள் சொல்லி திட்டி இருந்தால், குறிப்பாக எதிரிகள் என்ன வார்த்தைகள் பேசினார்கள் என கூறியிருப்பார்கள் ஆனால் எதிரிகள் என்ன வார்த்தைகளை பயன்படுத்தினார்கள் என அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகியோர்கள் கூறாத காரணத்தினால், இந்த எதிரிகள் அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகியார்களை சாதியின் பெயரை குறிப்பிட்டு கூறி திட்டினார்கள் என எடுத்துக்கொள்ள இயலாது. இதன் காரணமாக இந்த எதிரிகள் மீது அரசு தரப்பில் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளில் 1-வது எதிரி மீது இ.த.ச பிரிவு 294(b) கீழும், மேலும் 1 மற்றும் 2 ஆகிய எதிரிகள் ப.ச.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரிவுகள் 3(1)(r), 3(1)(s), கீழும் குற்றம் புரிந்துள்ளார்கள் என கருத இயலவில்லை.

**15.** அடுத்ததாக மேற்படி அ.சா.1 மற்றும் அ.சா.2 சாட்சிகளை பார்வையிட்டதில் எதிரிகள் தங்களை கொலைமிரட்டல்கள் எதுவும் செய்ததாக சாட்சிகளில் கூறவில்லை இதன்காரணமாக இந்த 1 மற்றும் 2 ஆகிய எதிரிகள் இ.த.ச பிரிவு 506(ii) உ/இ ப.ச.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரிவு 3(2)(va) ன் கீழ் குற்றம் இழைத்தார்கள் என கருதஇயலவில்லை.

**16.** தற்போது இந்த எதிரிகளில் இந்த 1ம் எதிரி மீது இ.த.ச பிரிவு 324 உ/இ ப.ச.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரிவு 3(2)(va) நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா என்பதை பார்வையிட ஆவணங்கள் பார்வையிடப்பட்டது. இந்த அ.சா.1 தனது சாட்சியத்தில் 1ம் எதிரி தன்னை கம்பியால் இரண்டு முறை தலையில் அடித்தார் என கூறியுள்ளார். இவரது சாட்சியத்தை உறுதிப்படுத்தும் வகையில் அ.சா.2 தனது சாட்சியத்தில் கூறியுள்ளார். மேலும் சம்பவத்தை கண்ணுற்ற சாட்சியான அ.சா.3 தனது சாட்சியத்தில் கூறியுள்ளார். இந்த வழக்கில் அ.சா-4 ஆன கண்ணுற்ற சாட்சி என அரசு தரப்பில் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ள சாட்சி அரசு தரப்பு வழக்கினை அனுசரித்து சாட்சியம் அளிக்கவில்லை என அரசு தரப்பில் நீதிமன்ற அனுமதியின் பேரில் மேற்படி சாட்சி குறுக்கு விசாரணையில் கேள்விக்கேட்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இந்த அ.சா-4 ஆனவர் தனது முதல் விசாரணையில் இந்த 1ம் எதிரி, அ.சா-1யை தாக்கியதை பார்த்ததாக கூறியுள்ளார். இந்த பொருண்மை 1ம் எதிரி தரப்பில் மறுக்கப்படவில்லை என்பது கவனத்தில் கொள்ளப்பட்டுள்ளது. அடுத்து அ.சா.1க்கு சிகிச்சை அளித்த மருத்துவர் **அ.சா.11 மருத்துவர் சிவராமன்**, அ.சா.1க்கு தலையில் காயம் இருந்துள்ளதை பார்த்து அ.சா.ஆ.4 ஆன விபத்து பதிவேட்டில் பதிவு செய்துள்ளதாக கூறியுள்ளார். அ.சா.1க்கு தொடர்

சிகிச்சை அளித்த **<u>அ.சா.12 மருத்துவர் சக்திபாலன்</u>,** அ.சா.1 சிகிச்சை அளித்து அவருக்கு இருந்த காயம் சிறிய காயம் என அ.சா.ஆ.6 காயச்சான்று வழங்கியுள்ளதாக கூறியுள்ளார். மேற்படி அ.சா.11 மற்றும் அ.சா.12 ஆன மருத்துவர்களின் சாட்சியம் மற்றும், அ.சா.ஆ.4 விபத்து பதிவேடு, அ.சா.ஆ.6 காயச்சான்று ஆகியவைகளை பார்வையிட்டதில் அ.சா.1க்கு தலையிலும் மற்றும் நெற்றிலும் காயங்கள் இருந்துள்ளது உறுதியாகியுள்ளது. மேற்கண்வாறு சாட்சியம் மற்றும் சான்றாவணங்கள் பரிசீலனை செய்ததில் 1ம் எதிரி அ.சா.1யை அடித்து காயம் ஏற்படுத்தியுள்ளார் என்பது தெரியவருகிறது. இந்நிலையில் 1ம் எதிரியானவர் அ.சா.1யை தாக்கப்பயன்படுத்திய இரும்பு கம்பியை காவல் துறையினர் கைப்பற்றவில்லை. காவல் துறையினர் கம்பியை கைப்பற்றாத காரணத்தினால் இந்த அ.சா.1யை எதிரி அடிக்கவே இல்லை என்றும் அ.சா.1 முதல் அ.சா.3 சாட்சிகள் அளித்துள்ள சாட்சியங்கள் பொய் எனவும், கருத இயலாது. பதிலாக சான்று பொருள் கைப்பற்றப்படாத காரணத்தினால் இந்த 1ம் எதிரி அ.சா.1 யை தாக்கப்பயன்படுத்திய சொல்லப்படும் ஆயுதம் உயிருக்கு அபாயம் விளைவிக்கும் ஆயுதம் என எடுத்துக்கொள்ள இயலாது. அ.சா.1யை, 1ம் எதிரி தாக்கப் பயன்படுத்திய பொருள் உயிருக்கு அபயாம் விளைவிக்கம் ஆயுதம் என எடுத்துக்கொள்ள இயலாத

காரணத்தினால் இந்த அ.சா.1 யை, 1ம் எதிரி தாக்கிய காயம் ஏற்படுத்திய செயல் இ.த.ச.பிரிவு 324 ன் கீழ் குற்றம் என கருத இயலாது. அதே வேலையில் இந்த 1ம் எதிரியின் செயல் இ.த.ச.பிரிவு 323 ன் கீழ் குற்றம் என்ற வரையறைக்குள் வருவதால் இந்த 1ம் எதிரியானவர் இ.த.ச.பிரிவு 323 ன் கீழ் தண்டனைக்குரிய குற்றம் புரிந்துள்ளார் என தெரியவருகிறது.

**17.** இவ்வழக்கில் அரசு தரப்பில் குறியீடு செய்யப்பட்டுள்ள அ.சா.ஆ-7 ஆன அ.சா-1ன் சாதி சான்றிதழ் மற்றும் அ.சா.ஆ-9 ஆன 1ம் எதிரியின் சாதி சான்றிதழ், ஆகியவைகளை பார்க்கும் போது அ.சா-1 ஆனவர் இந்து மதம் - பறையன் சமூகத்தை சேர்ந்தவர் என்பதும், 1ம் எதிரி இந்து மதம் - அகமுடையார் சமூகத்தை சேர்ந்தவர் என்பதும் தெரிய வருகிறது. இந்த பொருண்மைகள் எதிரிகள் தரப்பில் மறுக்கப்படவில்லை. மேலும், இந்த எதிரிகளும், அ.சா-1ம் நன்கு தெரிந்தவர்கள் என்ற பொருண்மை மறுக்கப்படவில்லை ஆக இந்த 1ம் எதிரிக்கு அ.சா-1யை நன்கு தெரியும் என்பதுடன், அவருடைய சாதியையும் அவருக்கு தெரியும் எனவும், மேற்படி அ.சா-1 பட்டியல் சமூகத்தினர் என்பதை தெரிந்தே 1ம் எதிரியானவர் அ.சா-1யை தாக்கி சிறு காயம் ஏற்படுத்தியுள்ளார் என்ற காரணத்தினால் இந்த எதிரியின் செயலானது இ.த.ச பிரிவு 323 உ/இ ப.சா.&ப.ப (வ.கொ.த)

சட்டப்பிரிவு 3(2)(va)-ன் கீழ் தண்டனைக்குரிய குற்றம் புரிந்துள்ளார் என தெரியவந்துள்ளது என இந்நீதிமன்றம் கருதுகிறது.

**18**. இந்நிலையில் இந்த அ.சா.1 தனது குறுக்குவிசாரணையில் போலீசார் தன்னிடம் பலமுறை விசாரணை செய்யதாகவும், அப்போதெல்லாம் தன்னிடம் கையொப்பம் பெற்றதாகவும் கூறியுள்ளார். இதனால் இந்த அ.சா.1 பல புகார் கொடுத்துள்ளதாக சொல்லியுள்ளர்கள் எனவும் அதன் காரணமாக இவ்வழக்கில் உள்ள அ.சா.ஆ.1 ஆன புகாரை தவிர ஏனைய புகார்கள் மறைக்கப்பட்டுள்ளது என்றும், அ.சா.1 தனது சாட்சியத்தில் அ.சா.3 முகேஸ் என்பவரை தெரியாது என கூறியுள்ளார். ஆனால் அ.சா.3 முகேஸ் தனது சாட்சியத்தில் தனக்கு அ.சா.1 யை நன்கு தெரியும் எனக்கூறியுள்ளார். ஆக தனக்கு தெரிந்த அ.சா.3 யை தெரியாது என அ.சா.1 சாட்சியத்தில் கூறியுள்ள காரணத்தினால் இந்த அ.சா.1ன் சாட்சியம் ஏற்க தக்கதல்ல என முடிவு செய்யவேண்டும் என எதிரிகள் தரப்பில் செய்யப்பட்டுள்ள வாதங்களை பொறுத்தவரையில் இந்த அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகிய சாட்சியங்களில் சில குறைபாடுகள் உடையதாக காணப்பட்டாலும், அ.சா.1-யை, 1ம் எதிரி அடித்துள்ளார் என்ற பொருண்மையினை ஒதுக்கி தள்ளும் வகையில் அமையவில்லை என இந்நீதிமன்றம் கருதுகிறது.

**19.** தற்போது இவ்வழக்கில் உள்ள 2ம் எதிரி மீதான இ.த.ச பிரிவு 323 உ/இ ப.ச.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரிவு 3(2)(va) குற்றச்சாட்டு நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா என்பதை தீர்மானிக்க ஆவணங்கள் பார்வையிடப்பட்டது.

**20.** இந்த அ.சா-2 ஆனவர் தனது சாட்சியத்தில் 2ம் எதிரி தன்னை **கல்லால்** அடித்தாக கூறியுள்ளார். திருவாரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துமனையில் இந்த அ.சா.2 சிகிச்சைக்காக சேர்ந்தபோது அங்கிருந்த அ.சா.11 ஆன மருத்துவர் சிவராமன் என்பவரிடம் தன்னை **இரும்பினால் ஆன ஸ்பேனரை** கொண்டு **தெரிந்த ஒரு நபர்** தாக்கியதாக கூறியுள்ளார் என அ.சா.11 ஆன மருத்துவர் தனது சாட்சியத்தில் கூறியுள்ளார். மேலும், இந்த தகவலை அ.சா.ஆ.5 ஆன விபத்துபதிவேடு பதிவு செய்துள்ளதாகவும் அ.சா-11 கூறியுள்ளார். இவ்வாறான நிலையில் அ.சா-11 ஆன மருத்துவர் குறுக்கு விசாரணையில் இந்த அ.சா-2 மருத்துவமனையில் சேரும் போது தன்னை **அடையாளம் தெரியாத** ஒரு நபர் தாக்கிவிட்டதாக கூறினார் என்றும், அந்த விபரத்தை அ.சா.ஆ-5 ஆன விபத்து பதிவேட்டில் பதிவு செய்துள்ளார் என கூறியுள்ளார். தற்போது இந்த அ.சா.ஆ-5 -யை பார்வையிட்டதில் மருத்துவரிடம் இந்த அ.சா-2 அடையாளம் **தெரியாத நபர்**

தன்னை தாக்கியதாக தான் மருத்துவரிடம் அ.சா-2 தெரிவித்துள்ளதாக தெரிய வருகிறது.

**21.** மேற்கண்டவாறு சாட்சிகள் சான்றாவணங்களை பரிசீலனை செய்ததில் இந்த வழக்கில் அ.சா-2 தன்னை, 2 ம் எதிரி கல்லால் அடித்தாக கூறியுள்ள சூழ்நிலையில் மருத்துவரிடம் இரும்பு ஸ்பேனரால் தாக்கியதாக கூறியுள்ளதும், அடையாளம் தெரிந்த இந்த 2 ம் எதிரியை பொறுத்தவரையில் மருத்துவரிடம் கூறும் போது அடையாளம் தெரியாத நபர் தன்னை தாக்கியதாக கூறியுள்ள பொருண்மையையும் பார்க்கும் போது இந்த 2 ம் எதிரி அ.சா-2 யை அடித்து காயம் ஏற்படுத்தினார் என்றும் சொல்லப்படும் பொருண்மை சந்தேகத்திற்கு இடமளிக்கம் வகையில் அமைந்துள்ளது. இதனால் சந்தேகத்தின் பலனை 2 ம் எதிரிக்கு வழங்கிட இந்நீதிமன்றம் கருதுகிறது. இதனை தொடர்ந்து இந்த 2 ம் எதிரி மீதான இ.த.ச பிரிவு 323 உ/இ ப.சா&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரிவு 3(2)(va) குற்றச்சாட்டு சந்தேகத்திற்கு இடமின்று நிரூபணம் செய்யப்படவில்லை என இந்நீதிமன்றம் கருதுகிறது.

**22.** மேற்கண்ட வகையில் சாட்சிகள் சான்றாவணங்கள் அனைத்தையும் பரிசீலனை செய்ததில் 1 ம் எதிரி மீது இ.த.ச பிரிவு 324 உ/இ ப.சா & ப.ப (வ.கொ.த) சட்டப்பிரிவு. 3(2)(va)-ன் கீழ் குற்றச்சாட்டு

வனையப்பட்டிருந்தபோதிலும், இந்த 1ம் எதிரி இ.த.ச பிரிவு 323 உ/இ ப.சா & ப.ப (வ.கொ.த) சட்டப்பிரிவு. 3(2)(va)-ன் கீழான குற்றம் நிரூபணம் செய்யப்பட்டுள்ளது எனவும், 1ம் எதிரி மீதான மற்ற இ.த.ச பிரிவு 294(b), ப.சா.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரிவுகள் 3(1)(r), 3(1)(s), இ.த.ச பிரிவு 506(ii)-ன் கீழ் குற்றச்சாட்டுகள் நிரூபணம் செய்யப்படவில்லை எனவும், 2-வது எதிரி ப.சா.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரிவுகள் 3(1)(r), 3(1)(s), இ.த.ச பிரிவு 323 உ/இ ப.சா.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரிவு 3(2)(va) மற்றும் இ.த.ச பிரிவு 506(ii)-ன் கீழான குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யப்படவில்லை எனவும் இந்நீதிமன்றம் கருதுகிறது.

**முடிவாக,** 1-ம் எதிரியை இ.த.ச பிரிவு 323 உ/இ ப.சா & ப.ப (வ.கொ.த) சட்டப்பிரிவு. 3(2)(va)-ன் கீழ் குற்றவாளி என தீர்மானித்து மேற்படி குற்றத்திற்கு 1ம் எதிரிக்கும் ஆறு மாத மெய்காவல் சிறை தண்டனையும் மற்றும் அபராதம் ரூ.1000/- விதித்தும், மேற்படி அபராத தொகை செலுத்த தவறும் பட்சத்தில் மேலும் ஒரு மாத மெய்காவல் சிறை தண்டனை விதித்தும், 1ம் எதிரியான இ.த.ச பிரிவு 294(b), ப.சா.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரிவுகள் 3(1)(r), 3(1)(s), இ.த.ச பிரிவு 506(ii)-ன் கீழ் குற்றவாளி இல்லை என தீர்மானித்தும், மேற்படி பிரிவுகளின் கீழ் 1ம் எதிரியை விடுதலை செய்தும், 2 ம் எதிரியானவர் ப.சா.&ப.ப (வ.கொ.த.) சட்டப்பிரிவுகள் 3(1)(r), 3(1)(s),

இ.த.ச பிரிவு 323 உ/இ ப.சா.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரிவு 3(2)(va) மற்றும் இ.த.ச பிரிவு 506(ii)-ன் கீழ் குற்றவாளி இல்லை என 2ம் எதிரியை விடுதலை செய்தும், பா.நா.சு.ச பிரிவு 258(1)-ன் படி விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

இவ்வழக்கில் தடயப் பொருட்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

இத்தீர்ப்புரை முழுவதும் என்னால் நேரடியாக சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு இன்று 2026 ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 29-ஆம் நாள் இந்த திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

VADIVEL M

Digitally signed by VADIVEL M
Date: 2026.04.29 18:30:24 +0530

அமர்வு நீதிபதி,
பட்டியில் வகுப்பினர் மற்றும் பழங்குடியினர்
(வன்கொடுமை தடுப்பு)
வழக்குகளை விசாரிப்பதற்கான
சிறப்பு நீதிமன்றம், திருவாரூர்.

**அரசுத்தரப்பு சாட்சிகள்**

| | |
|---|---|
| அ.சா.1 | ஆனந்த் |
| அ.சா.2 | தங்கமணி |

அ.சா.3 முகேஷ்

அ.சா.4 சுபாஷ் சந்திரபோஸ்

அ.சா.5 பாலமுருகன்

அ.சா.6 புகழேந்தி

அ.சா.7 சாமிநாதன்

அ.சா.8 செல்வசண்முகம்

அ.சா.9 பாஸ்கர்

அ.சா.10 பாப்பையன்

அ.சா.11 சிவராமன் - மருத்துவர்

அ.சா.12 சக்திபாலன் - மருத்துவர்

அ.சா.13 குருநாதன் - வட்டாட்சியர்

அ.சா.14 சரவணகுமார் - வட்டாட்சியர்

அ.சா.15 நடராஜசேதுபதி - மருத்துவர்

அ.சா.16 ராதாகிருஷ்ணன் - சிறப்பு உதவி ஆய்வாளர்

அ.சா.17 இலக்கியா - காவல் துணை கண்காணிப்பாளர்

**அரசுத்தரப்பு சான்றாவணங்கள்:-**

அ.சா.ஆ.1 புகார்

அ.சா.ஆ.2 பார்வை மகஜரில் உள்ள அ.சா.9-ன் முதலாவது சாட்சி கையொப்பம்

அ.சா.ஆ.3 பார்வை மகஜரில் உள்ள அ.சா.10-ன் இரண்டாவது சாட்சி கையொப்பம்

அ.சா.ஆ.4 அ.சா.1-க்கான விபத்து பதிவேடு

அ.சா.ஆ.5 அ.சா.2-க்கான விபத்து பதிவேடு

அ.சா.ஆ.6 அ.சா.1-க்கான காயச்சான்று பதிவேடு

அ.சா.ஆ.7 அ.சா.1-க்கான சாதி சான்று

அ.சா.ஆ.8 அ.சா.2-க்கான சாதி சான்று

அ.சா.ஆ.9 1-ம் எதிரியின் சாதி சான்று

அ.சா.ஆ.10 2-ம் எதிரியின் சாதி சான்று

அ.சா.ஆ.11 அ.சா.2 மருத்துவமனையிலிருந்து தலைமறைவாகி விட்டார் என்பதற்கான சான்று

அ.சா.ஆ.12 முதல் தகவல் அறிக்கை

அ.சா.ஆ.13 செயல்முறை ஆணை

அ.சா.ஆ.14 பார்வை மகஜர்

அ.சா.ஆ.15 மாதிரி வரைபடம்

**அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள சான்று பொருள்.**-இல்லை-

**எதிரிகள் தரப்பு சாட்சி , சான்றவணங்கள் மற்றும் சான்றுபொருட்கள்:-**

-இல்லை-

VADIVEL M

Digitally signed by VADIVEL M
Date: 2026.04.29 18:30:37 +0530

அமர்வு நீதிபதி,
பட்டியில் வகுப்பினர் மற்றும் பழங்குடியினர்
(வன்கொடுமை தடுப்பு)
வழக்குகளை விசாரிப்பதற்கான
சிறப்பு நீதிமன்றம், திருவாரூர்.